# தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும்

## தொகுதி – II




பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் மா. சிதம்பரம்

முனைவர் சு. குமரன்

முனைவர் சு. இராமலிங்கம்

திரு. கி. பொன்னுதுரை

II

# தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் மா. சிதம்பரம்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் சு. இராமலிங்கம்**<br>**திரு. கி. பொன்னுதுரை** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2018 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476, பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 9843273994, 7358863327 |
| பக்கங்கள் | : | XVIII + 488 = 506 |
| விலை | : | உரூ. 400/- |

**ISBN : 978 - 93 - 80800 - 90 - 5**


# International Conference on Depiction of Religion and Human Society in Tamil Literature


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. M. Chidambaram**<br>**Dr. S. Kumaran. Dr. S. Ramalingam**<br>**Mr. K. Ponnudhurai** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | November, 2018 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XVIII + 488 = 506 |
| Prize | : | **Rs. 400/-** |

119. முனைவர் அ. பாரதிராணி 616
வள்ளுவர் வலியுறுத்தும் சமூகம்

120. சு. தேவி 621
ஆத்தங்கரை ஓரம் - சமுதாயச் சிந்தனை

121. ம. துரை 625
ஆசாரக்கோவை உணர்த்தும் சமுதாயம்

122. பேராசிரியர் வை. குணசேகரன் 631
தமிழகத்தில் கோயிலும் குடியிருப்பும்

123. வி.சி. காமராஜ் 637
வைரமுத்து கவிதைகளில் சமூகச் சிந்தனை

124. முனைவர் பா. காசிவைரவன் 641
தமிழ் இலக்கியமும் மனித வாழ்க்கைச் சூழலும்

125. முனைவர் போ. மாரிசாமி,
முனைவர் இராம. சந்திரசூடன் 646
தமிழ் இலக்கியங்களில் நிர்வாக மேலாண்மைச் சமூகம்

126. மா. முத்துராமன் 651
சங்க இலக்கியங்களில் சமூகப் பண்பாடு

127. முனைவர் ஐ. நிலோபர் பேகம் 656
திருக்குரானும் திருமணக் கொடையும்

128. முனைவர் ஆ. பாண்டி 659
புலம்பெயர்தேயத்தின் சமூகச் சூழலும் பின்னணியும்

129. முனைவர் சி. பரமேஸ்வரி 664
திருப்பரங்குன்றத் திருத்தலம்

130. சு. ஷிரின் பர்கானா, முனைவர் து. அல்பேரிஸ் 669
திருக்குர்ஆன் கூறும் தர்மம் (ஜகாத்)

131. முனைவர் க. சொல்லேருழவன் 673
வள்ளலாரின் மத நல்லிணக்கம்

132. கவிஞர் புதுகை வெற்றிவேலன் 678
இளங்கோவடிகள் காட்டும் சமூகம்

133. **Prof. S. Nagaraja** 683
Realistic Portrayal of Society in the Select Short Stories
of Nanjil Nadan.

134. மா. கிருஷ்ணவேணி 690
பத்துப்பாட்டு நூல்களில் பண்டைத் தமிழரின் சமூகம்

135. முனைவர் மு. கவிதா 696
தமிழ் வளர்ச்சிக்கு சைவ சமயத்தின் பங்கு

# 125. தமிழ் இலக்கியங்களில் நிர்வாக மேலாண்மைச் சமூகம்

**முனைவர் போ. மாரிசாமி**
உதவிப்பேராசிரியர்
வணிகவியல் துறை
ஆறுமுகம் பிள்ளை சீதை
அம்மாள் கல்லூரி
திருப்பத்தூர்-630211
சிவகங்கை மாவட்டம

**முனைவர் இராம. சந்திரசூடன்**
உதவிப்பேராசிரியர்
வணிகவியல் துறை
ஆறுமுகம் பிள்ளை சீதை
அம்மாள் கல்லூரி
திருப்பத்தூர்-630211
சிவகங்கை மாவட்டம்

## அறிமுகம்

நிறுவனத்தின் நெறிகளையும் நோக்கங்களையும் உருவாக்கும் கலையே நிர்வாகம் எனப்படும். இத்தகைய நிர்வாகங்கள் ஏற்படுத்தும் நெறிகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றும் கடமையே நிர்வாக மேலாண்மை எனப்படும். மேலாண்மை என்பது திட்டம், நிர்வாக அமைப்பு, செயல்பாடு, கட்டுப்பாடு ஆகிய அம்சங்களை உள்ளடக்கியதாகும். எதை, எவ்வாறு, எப்படி, எப்போது என்ற அடிப்படையில் சூழலில் கிடைக்கும் வளங்களையும், மனித ஆற்றலையும், ஒருங்கிணைத்து நோக்கங்கள் நிறைவேறும் வண்ணம் மேற்கொள்ளும் இயக்கமே நிர்வாக மேலாண்மையாகும்.

*"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்"* *(குறள்: 517)*

என்ற குறளின் மூலம் மேலாண்மை என்றால் என்ன என்பதை விளக்கியுள்ளார். மனித வாழ்வில் மனித ஆற்றல் தக்கமுறையில் பயன்படுத்தப்படுவதற்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்யவும் நிர்வாகவியலில் மேலாண்மை பற்றிய சிந்தனைகள் மனிதனுக்கு அவசியமாகிறது. மேலாண்மையியலில் பண்பாட்டின் தாக்கம் உண்டு. "பண்பாடு" என்பது மதிப்பு அடிப்படையில் உயர்ந்து நிற்பதால் மேலாண்மைச் சிந்தனைகள் பண்பாட்டு அடிப்படையில் தான் வளர முடியும். நமது நாட்டைப் பொறுத்தவரை பண்பாடும் மரபுகளும் வழிவழியாகக் காலங்காலமாகப் பயணப்பட்டு வந்துள்ளன. தமிழ் இலக்கியங்களில் மேலாண்மைக் கொள்கைகள் வேரூன்றிக் கிடக்கின்றன.

*"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்லது அரசு"* *(குறள் 385)*

என்ற வள்ளுவனின் குறளின் மூலம் ஒரு நிறுவனம் நெறிகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்கு வேண்டிய வழிமுறைகளை வகுப்பதே இயற்றுதல் அல்லது திட்டமிடல் ஆகும். தமிழ்

இலக்கியங்களில் நிர்வாக மேலாண்மை என்கிற தலைப்பின்கீழ் அரசவை, ஆட்சி, நீர், நகரகட்டமைப்பு, போர் மற்றும் வணிக நிர்வாக மேலாண்மை பற்றி விரிவாகக்காண்போம்.

## அரசவை நிர்வாகம்

அரசு அமைப்புவித்தல் என்பது அதிகார தொடர்பினை உறுப்பினர்களிடையே விரிவுபடுத்தக்கூடிய செயல்முறையினைக் குறிக்கின்றது. பொறுப்பு மற்றும் கடமைக்கான கட்டமைப்பினை இது உருவாக்குகிறது. நாட்டை நிர்வகிக்கும் மன்னர்கள் நிர்வாகம் திறம்பட நடத்த அமைச்சர்களின் குழு அமைத்து அரசின் நோக்கங்களை நிறைவேற்றி நல்லாட்சி செய்தார்கள் என்பதை,

*"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்*
*செற்றமும் உவகையும் செய்யாது காத்து*
*ஞேமன்கோ லன்ன செம்மைத் தாகிச்*
*சிறந்த கொள்கை அரங்கூறவையமும்"*
*(மதுரைக்காஞ்சி அ.எ.482-492)*

*"வினை மாட்சிய விரை புரவியொடு*
*மழை உருவின தோல் பரப்பி,*
*முனை முருங்கத் தலைச் சென்று, அவர்*
*விளை வயல் கவர்பூட்டி,*
*மனை மரம் விறகு ஆகக்*
*புலவு வாள், புலர் சாந்தின்,*
*முருகற் சீற்றத்து, உரு கெழு குருசில்,*
*மயங்கு வள்ளை, மலர் ஆம்பல்,*
*பனிப் பகன்றை, கனிப் பாகல்,*
*கரும்பு அல்லது காடு அறியாப்*
*பெருந் தண் பனை பாழ் ஆக,*
*ஏம நல் நாடு ஒள் எரி ஊட்டினை*
*நாம நல் அமர் செய்ய,*
*ஓராங்கு மலைந்தன, பெரும நின் களிறே" (புறம்.16)*

என்னும் பாடல்களின் மூலமாக அறியலாம். மேலும் இப்பாடல்கள் இயக்கம் எனும் நிர்வாக மேலாண்மை கொள்கையை அரசு நிர்வாகத்தில் கடைப்பிடித்துள்ளதற்கான சான்றாக அமைகின்றன.

## ஆட்சி நிர்வாகம்

ஆட்சி நிர்வாகம் சிறப்புற அமைந்திருந்ததனை,

*"நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்*
*கோழி எறிந்த கொடுங்காற் கணங்குழை*
*பொற்காற் புதல்வர்...........*
*.... சிறுதேர் முன்வழி விலங்கும். (பட்டி.22 -25)*

எனப் பட்டினப்பாலையும், "செய்ர்த்துஎழு தெவ்வர் திறைதுறை

போகிய" (பொருந.12வி) என பொருநர் ஆற்றுப்படையும் எடுத்துரைக்கின்றன. சிறந்த ஆட்சிமுறையில் மக்கள் செல்வச் செழிப்போடு, பகைவர் அச்சமின்றி வாழ்ந்த நிலையும், பகைவரிடம் இருந்து பெற்ற வரியை ஆக்கச் செயலிற்குப் பயன்படுத்தியதையும் இதன் மூலம் அறியமுடிகிறது.

## நீர் நிர்வாகமேலாண்மை

நிர்வாக மேலாண்மை பணிகளில் முதன்மையான பணி திட்டமிடுதல் எனபதாகும். திட்டமிடுதல் என்பது எதை செய்கிறோம் என்பதை முன்கூட்டியே தீர்மானித்து அதன்படி செயல்படுத்துவதாகும். எதிர்பார்க்கப்பட்ட முடிவினை அடைவதற்காக செயல்பாட்டினை தீர்மானித்து அதன்படி நடப்பதாகும். இது உள்ளம் சார்ந்த செயல்முறையாகவும், அறிவுசார் வசதிகளையும், தொலைநோக்கு பார்வையையும், கற்பனை திறத்தையும் மற்றும் தீர்க்கமான முடிவுகளையும் வழங்குகிறது. பண்டைய மக்களின் நீர் நிர்வாகமேலாண்மை திறன் பற்றி,

*"என்றூள் வியன் குளம் நிறைய வீசி*
*பெரும் பெயல் பொழிந்த ஏம வைகறை*
*பல்லோர் உவந்த உவகை எல்லாம்"*
*(அகம்- 42ஞ911)*

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இதன்வழி மழைநீரைக் குளங்களில் சேகரிக்கும் தொழில்நுட்பத்தைப் பண்டைய மக்கள் அறிந்திருந்ததை உணரமுடிகின்றன.

## நகர கட்டமைப்பு நிர்வாகம்

*"நீல் நிற உருவின் நெடியோன் கொப்பூழ்*
*நான்முக ஒருவற் பயந்த பல் இதழ்த்*
*தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றி*
*சுடுமன் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்"*
*(பொருணராற்றுப்படை -4வீ2-4வீ5)*

என்ற பாடல் அடிகள் தொழில் வளர்ச்சியின் உயர்வினைக் காட்டும் பகுதியாக நகர்புறம் அமைகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

*"யாறு எனக்கிடந்த தெருவின், சாறு என*
*இகழுநர் வெரூஉம், கவலை மறுகின்*
*கடல் என, கார் என ஒலிக்கும் கம்மையொடு*
*மலை என மழை என மாடம்ஓங்கி'*
*(மலைப்படுகடாம்- 481-484)*

என்ற வரிகளில், இரு மருங்கும் உள்ள மாடங்கள் ஆற்றின் கரை போலவும், தெரு ஆறு போலவும் நீண்டு மக்கள் திரலகளுடன் விளங்குகிறது என்பதனை உணர்த்துகின்றன.

**போர் நிர்வாகம்**

வீரமும் கொடையும் சங்ககால மக்களின் இரு கண்களாய் விளங்கியது. வீரத்தின் விளைவாகப் போர் நடந்தது. எனவே ஓர் அரசனின் வீரத்தையும் வலிமையையும் பகை நாட்டினருக்கும் தெரியப்படுத்தவே போர் மேற்கொள்ளபடுகிறது எனினும் போரில் உயர்வான செயல் முறைகளையும் அறத்தையும் தமிழர்கள் கடைபிடிதுள்ளனர் என்பதை,

*"அவு மானியல் பார்ப்பன மாக்களும்*
*பெண்டிரும் பிணியுடை யிரும் பேணித்*
*தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இருக்கும்*
*போனபோற் புதல்வரைப் பெறாஅதிரும்*
*எம்அம்பு கபிவிடுதும் நும்மரண் சேர்மின்"* (புறம் 9)

என்ற புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது. பசு, பார்ப்பனர், பெண்டிர், பணியாளர், புதல்வர்ப்பெறாதோர் என்பவர்களை எச்சரித்துப் புறப் போக்கிப் போர் தொடங்கினார் என இப்பாடல் மூலமாக உணரமுடிகிறது.

**வணிக நிர்வாகம்**

*"தேன் நெய்யோடு கிழங்கு மாறியோர்*
*மீன் நெய்யோடு நறவு மருகம்"*
(பொருநராற்றுபடை -214-154)

ஒரு பொருளுக்கு மாறாக மற்றொரு பொருளை பெரும் முறையை பண்டமாற்று முறை எனப்படும். குறிஞ்சி நிலத்தில் இருக்கும் மக்கள் தங்கள் நிலத்தில் விளைந்த தேனையும் கிழங்கையும் நெய்தல் நிலத்தில் விற்று அவற்றின் விலையாக மீனைப் பெற்றனர். அன்றைய வணிக முறையில் நம்பிக்கையும் நேர்மையான செயல்பாடும் காணப்பட்டது என்பதை இது விளக்குகிறது.

**நிறைவுரை**

ஆளும் பொறுப்பாளன் சிறந்த முறையில் ஆட்சி செய்யும் நிர்வாகத்தைப் பொறுத்தே நாட்டின் வளர்ச்சி மேம்பாட்டு அடைவதை அறிந்து கொள்ள முடியும். அதோடு அவ்வாட்சியாளனும் சிறப்பிக்கப் படுவான். இச்சிறந்த நிர்வாக முறையை,

*"மறைக்க மறையதாம், காமம்ஞு முறையும்*
*இறைவகையான் நின்று விடும்"* (நான்மணி:39:3-4)

என்று நான்மணிக்கடிகைச் சுட்டுகின்றது.

*"பெரியோர் சொல்பேணி பிறழாது நின்று*
*பரியா அடியார்ப் பறியான் கரியார் சொல்*
*தேறான் இவையான் தெளிந்து அடிசில் ஈத்து உண்டான்*
*மாறான் மண் ஆளுமாம் மற்று"* (ஏலம். 47)

என்று பாடல் அமைந்துள்ளது. மேற்கண்ட பாடல் நாட்டை நிர்வாகம் செய்யும் மன்னன், சான்றோர்களின் அறிவுரைகளைப் பாதுகாத்து, தவறாது அவற்றின் வழி செயல்படுவதும், அன்பு நிறைந்த உறவினர்களைப் பிரியாமல் இருத்தலும். வஞ்சர்களின் சொற்களைக் கேளாமல் இருப்பதும், வாழ்வின் பயனறிந்து அனைத்து மக்களுக்கும் உரிய உணவிற்குரிய வழிகளை வகுத்தக் கொடுத்தலும் தானும் அவர்களோடு மகிழ்ந்து உண்ணுதலும் ஆகிய அனைத்தும் ஆட்சியாளனுக்கு நிர்வாகம் என்கிறது. தமிழ் இலக்கியங்களில் காட்டும் நிர்வாக மேலாண்மை என்கிற தலைப்பின் கீழ் அரசவை, ஆட்சி, நீர். நகரகட்டமைப்பு, போர் மற்றும் வணிக நிர்வாக மேலாண்மை பற்றி வரலாற்று செய்திகளின் பதிவுகளை அறியமுடிகிறது. நிர்வாகக் கோட்பாட்டுகள் வெற்றி அடைய நாம் நம் இலக்கியங்களை கற்றாலே போதும் நாம் அனைவருமே நிர்வாக மேலாண்மையில் வல்லுனர்கள் ஆகலாம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.